THE HINDU

7 MAR 2022

PAGE 2

# Pondicherry University inks MoU with Indian Air Force

## It will help IAF personnel pursue PG courses and research



Pondicherry University Vice Chancellor Gurmeet Singh and Assistant Chief of Air Staff Air Vice Marshal Rajeev Sharma, at an MoU-signing function held recently at the university.

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

Pondicherry University has signed a memorandum of understanding with the Indian Air Force to help IAF personnel pursue postgraduate courses and research at the university.

Vice-Chancellor Gurmeet Singh said the university would be happy to extend maximum help to IAF officers to pursue studies and research in as many departments as possible, apart from the departments covered under the MoU, a release from the university said.

The university will also consider offering courses to the lower-rank personnel through its Directorate of Distance Education, he said.

Assistant Chief of Air Staff Air Vice-Marshal Rajeev Sharma said Project Akashdeep, a human resource development project initiated by the IAF, was aimed at fulfilling the higher educational aspirations of its personnel. The IAF signed this MoU with under this project. The IAF, which has also created Chairs of Excellence at Pune University and the Indian Institute of Technology, Kanpur, is committed to promoting capacity-building and indigenous technical solutions to problems, he said.

Rajeev Jain, Officer on Special Duty (Culture and Cultural Relations); A. Subramanyam Raju, Dean of International Relations; and S.I. Humayun, Coordinator (MoU-Defence Services), participated.

Later, the IAF team, which comprised Group Captain Shakthi Sharma (Director, University Outreach Programme), and Squadron Leader Vaidyanathan (Deputy Director, University Outreach Programme), visited various departments and interacted with the faculty, the release said.

DINAKARAN

7 MAR 2022

PAGE 6

## புதுவை பல்கலைக்கழகம்

# இந்திய விமானப்படையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



புதுச்சேரி பல்கலைக்கழகம் - இந்திய விமானப்படை இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில் கையெழுத்தானது.

புதுச்சேரி, மார்ச் 7: பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் இந்திய விமானப்படையுடன் (கல்வி இயக்குநரகம்) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது விமானப்படை அதிகாரிகளுக்கு புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் முதுகலை படிப்புகள் மற்றும் ஆராய்ச்சி படிப்பை தொடர உதவுகிறது. இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் கலந்து கொண்டு பேசியதாவது:

இந்திய விமானப்படையின் நேரக்கட்டுப்பாடு மற்றும் பணி சார்ந்த அணுகுமுறையை மற்றவர்கள் முன்மாதிரியாகக் எடுத்துக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் உள்ள துறைகளை தவிர்த்து முடிந்தவரை மேலும் பல்வேறு துறைகளில் இந்திய விமானப்படை அதிகாரிகளுக்கு அதிகபட்ச உதவியை வழங்குவதில் புதுவை பல்கலைக்கழகம் மகிழ்ச்சியடையும். மேலும், எதிர்காலத்தில் தொலைதூர கல்வி இயக்குநரகம் மூலம் அதிகாரி அல்லாது விமானப்படை வீரர்களுக்கும் பட்டப்படிப்புகளை வழங்குவது குறித்து பல்கலைக்கழகம் பரிசீலிக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து, உதவி தலைமை தளபதி ஏர் வைஸ் மார்ஷல் ராஜீவ் ஷர்மா பேசுகையில், இந்திய விமானபடையின் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு அங்கமான ஆகாஷ்தீப் திட்டம் விமான படை வீரர்களின் உயர் கல்வி விருப்பங்களை நிறைவேற்றுகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய விமானப்படை புதுச்சேரி பல்கலைக்கழகத்துடன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்திய விமானப்படையின் தேவைப்பட்ட துறைகளில் விமானப் படை அதிகாரிகள் தங்கள் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை தொடர்வார்கள் என்றார். பின்னர், பல்வேறு புல முதல்வர்கள் மற்றும் துறை தலைவர்களுடனும் உரையாடினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அதிகாரி (கலாசாரம் மற்றும் கலாசார உறவுகள்) ராஜீவ் ஜெயின் மற்றும் புல முதல்வர்கள், துறை தலைவர்கள் கலந்து கொண்டனர். அதன் பிறகு, ஏர் வைஸ் மார்ஷல் ராஜீவ் சர்மா தலைமையிலான இந்திய விமானப்படை குழுவினர் சர்வதேச உறவுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் புல முதல்வர் சுப்ரமணியம் ராஜூ மற்றும் ஒருங்கிணைப்பாளர் ஹுமாயூன் ஆகியோருடன் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளுக்கு சென்று பார்வையிட்டனர்.

DINAMANI

7 MAR 2022

PAGE 3

# விமானப் படை, புதுச்சேரி பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்துடன் அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட இந்திய விமானப் படை அதிகாரிகள்.

**புதுச்சேரி, மார்ச் 6:** இந்திய விமானப் படை அதிகாரிகளின் படிப்புக்காக புதுச்சேரி பல்கலைக்கழகத்துடன், இந்திய விமானப் படை (கல்வி இயக்ககம்) அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மெற்கொண்டது.

இந்த நிகழ்வில் புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங், விமானப் படை உதவி தலைமைத் தளபதி ஏர்வைஸ் மார்ஷல் ராஜீவ் ஷர்மா, பல்கலைக்கழக சிறப்பு அதிகாரி (கலாசாரம், கலாசார உறவுகள்) பேராசிரியர் ராஜீவ் ஜெயின் மற்றும் பல்வேறு புல முதல்வர்கள், துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்திய விமானப் படை குழுவின் குரூப் கேப்டன் சக்தி ஷர்மா (பல்கலைக்கழக விரிவு திட்ட இயக்குநர்), ஸ்குவாட்ரான் லீடர் வைத்தியநாதன் (பல்கலைக்கழக விரிவு திட்ட துணை இயக்குநர்), சர்வதேச உறவுகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் புல முதல்வர் பேராசிரியர் சுப்பிரமணியம் ராஜு, புரிந்துணர்வு ஒப்பந்த ஒருங்கிணைப்பாளர் ஹுமாயூன் ஆகியோருடன் ஏர் வைஸ் மார்ஷல் ராஜீவ் ஷர்மா பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளையும் பார்வையிட்டார்.

THE HINDU (TAMIL)

7 MAR 2022

PAGE 3

# இந்திய விமானப்படை, புதுச்சேரி பல்கலை. இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

■ புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் இந்திய விமானப்படை உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

ஒப்பந்தம் தொடர்பாக புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் கூறுகையில், "எதிர்காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் உள்ள துறைகளை தவிர்த்து முடிந்தவரை மேலும் பல்வேறு துறைகளில் இந்திய விமானப்படை அதிகாரிகளுக்கு அதிகப்பட்ச உதவியை வழங்குவதில் புதுச்சேரி பல்கலைக்கழகம் மகிழ்ச்சியடையும்.

எதிர்காலத்தில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகம் மூலம் அதிகாரி அல்லாது விமானப் படை வீரர்களுக்கும் பட்டப்படிப்புகளை வழங்குவது குறித்து பல்கலைக்கழகம் பரிசீலிக்கும்" என்று குறிப்பிட்டார்.

**▼ இந்திய விமானப்படையின் தேவைக்குட்பட்ட துறைகளில் விமானப்படை அதிகாரிகள் தங்கள் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை தொடருவார்கள்.**

உதவி தலைமை தளபதி ஏர் வைஸ் மார்ஷல் ராஜீவ் ஷர்மா கூறுகையில், "இந்திய விமானப்படையின் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு அங்கமான ஆகாஷ்தீப் திட்டம் விமானப்படை வீரர்களின் உயர் கல்வி விருப்பங்களை நிறைவேற்றுகிறது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய விமானப்படை புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்துடன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இந்திய விமானப்படையின் தேவைக்குட்பட்ட துறைகளில் விமானப்படை அதிகாரிகள் தங்கள் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை தொடருவார்கள். இந்திய விமானப்படை புனே பல்கலைக்கழகம் மற்றும் கான்பூரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றில் சிறப்பு இருக்கைகளையும் உருவாக்கியுள்ளது. இந்திய விமானப் படையில் திறன் மேம்பாடு மற்றும் பிரச்சினைகளுக்கு உள்நாட்டு தொழில்நுட்பங்களை கொண்டே தீர்வுகளை பெற ஊக்குவித்து வருகிறோம்.

பல்வேறு துறைகளில் உயர் தகுதிகளை அதிகாரிகள் பெறுவது, ஆகாஷ்தீப் போன்ற திட்டங்களின் நோக்கங்களை அடைய ஏதுவாக இருக்கும்" என்று அவர் கூறினார்.